2012 ஏப்ரல் 20] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதுமட்டுமல்லாமல், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட புற நோயாளிகள் சிகிச்சை பெறும் மருத்துவமனையான சென்னையில் உள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும்பொருட்டு, எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 14 கோடி ரூபாய் மதிப்பில் பல் மருத்துவக் கல்லூரிக்கான ஒரு புதிய அடுக்குமாடிக் கட்டடம் என்னால் கடந்த மாதம் 3 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தமிழ்நாடு மட்டுமல்லாமல், அண்டை மாநில மக்களும் சிகிச்சை பெற வருகின்றனர். இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனைக் கருத்தில்கொண்டும், பல் மருத்துவக் கல்லூரியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்திலும் தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், புதிய பணியிடங்களைத் தோற்றுவிப்பதற்கும் இதனை ஒப்புயர்வு மையமாக அதாவது Centre of Excellence in Dentistry ஆகத் தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

## 4. தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட, புதிய பணியிடங்களைத் தோற்றுவிக்க மற்றும் தரமுயர்த்த 10 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கிய முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் நலம் பேணுவதில்—சர்க்கரையைப் பார்க்கிறோம், இரத்தக் கொதிப்பைப் பார்க்கிறோம்—பல்வேறுவிதமான நோய்களுக்குக் கவனம் செலுத்துகிறோம். ஆனால் தொடர்ந்து இளமைப் பருவத்திலே இருந்து புறக்கணிக்கப்படுவதிலே, பல் பாதுகாப்பிற்கு மேலை நாடுகளைப்போன்று நாம் அதிகமாக முக்கியத்துவம் கொடுப்பது

கிடையாது. அதன் காரணமாக இளம் வயதிலேயே பற்களைக்கூட எடுக்கக்கூடிய நிலைமை உருவாகி வருகிறது. எனவே, அப்படிப்பட்ட ஒரு மிக முக்கியமான துறைக்கு இதுநாள் வரையிலும் ஒரு அழுத்தம் கொடுக்கப்படாமல் இருந்தது. எனவே, அதனுடைய அவசியத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணர்ந்துகொண்டு, அதற்கு Centre of Excellence in Dentistry அதாவது, பல் துறையிலே உன்னதமான உயர்ந்த நிறுவனம் உருவாக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலே, ஏதோ ரூ.2 இலட்சம், ரூ.3 இலட்சம் என்று இல்லாமல் ஒரேயடியாக ரூ.10 கோடியை ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டக்கூடியது. அதை நான் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய்க்கு முதல் காரணம் பல்லில் இருந்துதான் ஆரம்பமாகிறது என்று அனைவருக்கும் தெரியும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இப்போதெல்லாம் என்ன நினைக்கிறார்கள் என்று இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பேசியிருந்தார். நாம் பல நோய்க்கு சிகிச்சைக்காக செல்கிறோம். ஆனால் நோய்க்கு மூலக்காரணமே நாம் உண்ணுகிற உணவு. ஏனெனில் வயிற்றில் பல் இல்லை, வாயில்தான் பல் இருக்கிறது, உணவை அரைத்துச் சாப்பிடுவதற்கு உபயோகமாக இருப்பது பல். அதைப் பேணிக் காக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். நாம் சரியாக உணவை அரைத்து சாப்பிட்டாலே ஜீரணம் நன்றாக ஆகும், உடல் நலம் நன்றாக இருக்கும். மீண்டும் நான் இப்போதும் சொல்கிறேன், தொலைநோக்குச் சிந்தனை, தொலைநோக்குப் பார்வை கொண்டவர் மாண்புமிகு முதலமைச்சராக இருக்கும்போது (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவமானாலும் சரி, மருத்துவமனைகளானாலும் சரி, "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று இருக்க வேண்டும்; தமிழகத்தில் அனைத்து மக்களும் சிறப்பாக வாழவேண்டும்; வருங்காலத்தில் சிறந்த செல்வங்களாக உருவாக வேண்டும் என்பதை மனதில் கொண்டு, உண்மையிலேயே ஒரு தாயுள்ளம் கொண்டு நிச்சயமாக அனைவரும் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே, Centre of Excellence in Dentistry-க்கு ரூ.10 இலட்சம் கொடுக்கிறோம்,

ரூ.20 இலட்சம் கொடுக்கிறோம் என்று சொல்லாமல் ரூ.10 கோடி ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. அதை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் பாராட்டி வரவேற்கிறேன் என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பல்லற்றுப் போனால் சொல்லற்றுப் போய்விடும்' என்பது கிராமத்திலே பழமொழி. பல்லை வைத்துக் கொண்டுதான் வயதையே அந்தக் காலத்தில் கணக்கெடுத்ததாக மருத்துவக் குறிப்புகள் இருக்கின்றன. தமிழகம் முழுமைக்கும் இன்றைக்கு அப்படி பல்லற்றுப் போய், சொல்லற்றுப் போகக்கூடிய சூழ்நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கு, சொல்லாய், செயலாய் விளங்கக்கூடிய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு சீரிய திட்டத்தை அறிவித்திருப்பதைத் தமிழகத்திலுள்ள எளிய மக்களின் சார்பிலே வாழ்த்திப் பாராட்டி வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரோக்கியமான வாழ்வை தன் நாட்டு மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்ற அடிப்படையிலே மருத்துவத் துறையிலே பல்வேறு துறைகள் இருக்கின்றன, இதயம் சார்ந்த துறை, வயிறு சம்பந்தமான துறை, மூளை சம்பந்தமான துறை, பல்வேறு துறைகளுக்குச் சிறப்பு மருத்துவமனைகளும் அதுகுறித்த சிறப்பு மருத்துவர்களும் இருந்தபோதும்கூட, நம்முடைய அன்னை, தமிழ்நாட்டில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகு, (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை பல்வேறு துறைகளில் புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து வருகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், 10 கோடி ரூபாயை அள்ளித் தந்து, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை அறிவித்து நம்முடைய மாநிலத்து மக்கள் மட்டுமல்ல; தென்னகத்திலே இருக்கின்ற பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த மக்களும்கூட வந்து பயன்பெறக்கூடிய அளவிற்கு ஒரு

தரமான தலைசிறந்த மருத்துவக் கல்லூரியை நிறுவியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி பாராட்டி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை மென்மேலும் சிறப்பாக்க வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல் மருத்துவக் கல்லூரி பல் மருத்துவமனைக்கு ரூ.10 கோடியை ஒதுக்கியுள்ளார்கள். தமிழகத்திலே இதுவரையிலே இல்லை. அதை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசுத் தரப்பில் கொண்டு வந்து, அதுவும் ரூ.10 கோடி மொத்தமாக ஒதுக்கி, தமிழகத்தில் மட்டுமல்லாது, தமிழக மக்கள் மட்டுமல்லாது, அண்டை மாநிலங்களும் பயன்பெறுகின்ற வகையிலே ஒரு சிறந்த பல் மருத்துவக் கல்லூரியும், பல் மருத்துவமனையும் உருவாக்கித் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாகப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நகர்ப்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் போன்றவற்றிற்கு மட்டுமல்லாமல், பல் மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்கான முறையிலே, அது ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து, வட்டங்களிலிருந்து செய்து கொடுப்பதற்கான உறுதியினை இங்கே அறிவித்ததோடு மட்டுமல்லாமல், பல் மருத்துவக் கல்லூரியினுடைய தரத்தை உயர்த்துவதற்கான முறையில், அந்தப் பல் மருத்துவக் கல்லூரிக்கு ரூபாய் 10 கோடியை ஒதுக்கி, ஏழை மக்கள் மருத்துவ வசதி பெறுவதற்கான முறையிலே செய்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் பல் மருத்துவமனை பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. இந்தப் பல் மருத்துவக் கல்லூரியில்தான் என்னுடைய தந்தை டாக்டர் எம். பத்மநாபன் அவர்கள் 1979 வரை Senior Professor ஆகப் பணியாற்றினார். 1979 இல் அவர் இறந்தார். அதன் பின்னர், எப்பொழுதுமே எங்கள் குடும்பமே நினைத்துக் கொண்டிருக்கும்; இந்த பல் மருத்துவமனையும், கல்லூரியும் தரம் உயர்த்தப்படாதா, விரிவுப்படுத்தப்படாதா என்ற ஆதங்கம் எங்களுக்கு மிகவும் இருந்துவந்தது. தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூபாய் 10 கோடி நிதியை ஒதுக்கி, பெரிய கட்டடமாக விரிவாக்கி, அந்த இடத்தையும் பெரியதாக வழங்கி, அந்த மருத்துவமனைக்கே ஒரு பெரிய தனி அந்தஸ்தை உருவாக்கி, இன்று Centre of Excellence in Dentistry என்று உருவாக்கியிருக்கிறார்கள். நிச்சயமாக இது தமிழ்நாட்டிற்கு பெரிய வரப்பிரசாதம். அந்த வகையில், இந்தியாவுக்கே ஒரு எடுத்துக்காட்டாக அமையக்கூடிய ஒரு கல்லூரியாகவும், மருத்துவமனையாகவும் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், எனக்கு personal ஆகவே அதைப்பற்றி நன்றாகத் தெரிந்ததால், இதை நான் மிகவும் ஆழமாக, மகிழ்ச்சியாக உணர்கிறேன். என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல் போனால் சொல் போகும்" என்று சொல்வார்கள். சொல் மட்டுமல்ல; முகமும் விகாரம் அடையும். சென்னை பல் மருத்துவமனை 60 ஆண்டுகள் பழமைவாய்ந்த மருத்துவமனை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்களுடைய கடந்த ஆட்சியிலே 52 கிரவுண்ட் இடத்தை ஒதுக்கி, கடந்த பிப்ரவரி மாதம் ஒரு பெரிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். இன்றைக்கு, இந்த மருத்துவமனைக்கு 10 கோடி ரூபாய் நிதி அளித்து,

இந்தியாவிலேயே ஒரு முதன்மை பல் மருத்துவமனையாக, மேன்மைமிகு மருத்துவமனையாக (Centre of Excellence in Dentistry) அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஏழையெளிய மக்களின் சார்பாகவும், மருத்துவ சமுதாயத்தின் சார்பாகவும் மற்றும் நல்வாழ்வுத் துறையின் சார்பாகவும் என்னுடைய உளங்கனிந்த நன்றியை சிரம் தாழ்த்தி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விவரங்களைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். இந்தப் பல் மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்பதற்காக, கடந்த ஆட்சிக் காலத்திலேயே, மாண்புமிகு அமைச்சர் தெரிவித்ததைப்போல, நிலம் ஒதுக்கப்பட்டு 14 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் எழுப்பப்பட்டு, அதைத்தான் நான் கடந்த மாதம் 3 ஆம் தேதி திறந்து வைத்தேன். ஏற்கெனவே இதற்காக 14 கோடி ரூபாய் செலவழித்துவிட்டோம். இப்போது, மேலும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு இதை Centre of Excellence in Dentistry என்று உருவாக்குவதற்கு மேலும் 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "பல் போனால் சொல் போச்சு" என்பார்கள். "ஆலும், வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பார்கள். பழங்காலத்திலிருந்தே பல் மருத்துவத்திற்கு நம்முடைய முன்னோர்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறார்கள். வட சென்னையிலுள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தமிழ்நாடு மட்டுமல்லாமல், அண்டை மாநில மக்களும் சிகிச்சை பெற வருகின்றனர். இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனைக் கருத்தில்கொண்டும், பல் மருத்துவக் கல்லூரியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்திலும், தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், புதிய பணியிடங்களைத் தோற்றுவிப்பதற்கும், இதனை ஒப்புயர்வு மையமாக, அதாவது, Centre of Excellence in Dentistry ஆகத் தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுத்து, அதற்காக 10 கோடி

*ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு வட சென்னை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-15*

## 5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 39 – கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)**

**(இ) கோரிக்கை எண் 40 – பாசனம் (பொதுப் பணித் துறை)**

---

**(அ) கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012-2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். (குறுக்கீடு) நேரம் இல்லை, உட்காருங்கள். நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,592,83,08,000/-, மூலதனக் கணக்கில் ரூ.4,058,85,14,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*